# சிவவாக்கியர் பாடல்களில் ஞானநிலை

63

பா.பவித்ரா [1] & முனைவர் ச.பிரியதர்சினி [2]

[1]முதுகலை முதலாமாண்டு தமிழ், [2] இணைப்பேராசிரியர்,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043

மின்னஞ்சல் – balrajpavithra329@gmail.com, priyadharshini_tam@avinuty.ac.in

ஆய்வுச்சுருக்கம்:

ஞானநிலை என்பது மனிதன் நிலையற்ற பொருள்களான உறவு, பாசம், பற்று, பணம் முதலியவற்றின் மீது வைத்துள்ள மோகத்தினை விடுவித்து நிலையான பொருள் மேல் கவனம் செலுத்துவதே ஆகும். மேலும் இவ்வுலகத்தில் நிலையாகக் இருக்கும் பரஞ்சோதியை அடைவதற்கான வழியை மனிதனால் அடையமுடியும். பதினெண்சித்தர்களுள் ஒருவரான சிவவாக்கியர் தனது ஞானகோவைத் தொகுப்பில் ஞான நிலையை தனது பாடல்கள் வாயிலாகப் பதிவு செய்துள்ளார். இதில் ஞானம் என்பது அடைவதற்கான வழிமுறைகளை ஞானத்தின் வாசலை அடைவதற்கான அனுபவங்களை எடுத்துரைக்கும் விதம் குறித்து ஆய்வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**:

ஞானம் – பரம்பொருள் – உள்ளம் - அண்டம்

**முன்னுரை :**

மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் நாளும் தேய்ந்து கொண்டிருக்கிறான். ஆறறிவு கொண்ட உயிர் என்றாலும் மனிதன் அலைந்து தேடும் அனைத்துப் பொருட்களும் தன்னுடன் இறுதியில் வரப்போவதில்லை என்றும் தெரிந்தும் கூட மனித மனமானது நிலையற்ற பொருள்களின் மேல் ஆசை கொண்டுள்ளது. இந்த பிரபஞ்சத்திற்கு எவ்வாறு வந்தோமோ அதே போலத்தான் நம்முடைய இந்த மனித வாழ்க்கை முடியும். இதற்கு இடைப்பட்ட காலத்தில் நம் ஆன்மாவானது எவ்வாறு முக்தி பெறுவதற்கான வழிமுறையை செயல்படுத்தாமல். உறவு,உடை, செல்வம் போன்ற இவ்வுலகில் நிலையற்ற பொருள்களின் மேல்தான் மனித மனமானது பற்றுக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து எவ்வாறு மனிதனை விடுவித்து அவனின் ஆன்மாவிற்கு முக்தி அளிப்பது என்பதனை சிவவாக்கியர் கூறும் ஞான நிலையை அடைதல்குறித்து அறிந்துகொள்வோம்.

**சித்தர்:**

சித்தர் என்னால் “சித்தி” என்றும் பொருள் உண்டு. சித்தி என்பதற்கு “வெற்றி” என்று பொருள் உண்டு. சித்தர்கள் என்பவர் சகமனிதன் போல் வாழ்க்கையில் இல்லாமல்.

இயற்கையோடு இணைந்து வாழக்கூடியவர்கள். இவர்கள் செல்வம், உறவு போன்ற நிலையற்ற பொருள்களின் மேல் உள்ள பற்றினை முழுதும் துறந்தவர்களாகவும் மற்றும் வீடுபேறு அடைந்தவர்களாகவும் திகழ்ந்தவர்கள் தான் சித்தர்கள் ஆவார்கள். ஆதிச்சித்தனாக கருதப்படுபவர் தான் சிவபெருமான் ஆவார். சித்தர்கள் அஷ்டமா சித்தி என்னும் அணிமா,மகிமா, கரிமா,லகிமா, பிராப்தி,பிரகாமியம், ஈஷத்துவம், மற்றும் வசித்துவம் போன்ற யோக நெறிகளை கற்றுத் தேர்ந்தவர்களாக விளங்குபவர்கள் தான் சித்தர் என்று அழைக்கப்படுகின்றனர். அஷ்டம் என்றால் எட்டு என்று பொருள்படும்.

**சிவவாக்கியர் குறிப்பு:**

சிவவாக்கியர் பதினெண் சித்தர்களின் ஒருவர் ஆவார் இவரின் ஆன்மீகப் பயணம் எங்கிருந்து தொடங்கியது என்றால். காசியில் தான் இவரின் ஆன்மீக பயணம் தொடங்கியது. காசி மாநகரில் கங்கை நதிக்கரை அருகில் ஒரு ஞானி செருப்பு தைத்துக் கொண்டிருந்தார் அவரைப் பார்த்ததும் சிவவாக்கியருக்கு ஒரு தெளிவு பிறந்தது. சிவவாக்கியர் செருப்பு தைக்கும் ஞானியைக் கண்டதும் இவர் இந்த உலக மக்களுக்கு மிக அரிதான கருத்துக்களையும்,ஆன்மீகப் போதனைகளையும் எடுத்துரைக்க கூடியவர் என்று அவருக்கு தோன்றிது. அதன் பிறகு அந்த ஞானி சிவவாக்கியரிடம் ஒரு கை சில்லறை காசுகளையும் மறுகையில் பேய்ச்சுரக்காயையும் தந்து இந்த நாணயத்தினை என் தங்கையான கங்கையிடம் கொண்டு சேர்ப்பாயாக என ஞானி கூறுகிறார். சிவவாக்கியர் அதனை மறுக்காமல் கங்கை கரைக்குச் சென்று சில்லறைக் காசுகளை நீட்டுகிறார் அதனை கங்கை நதியிலிருந்து ஒரு கை வந்து வாங்கிச் சென்றது. பின்பு சிவவாக்கியர் அந்த செருப்பு தைக்கும் ஞானியிடம் செல்கிறார். ஞானி சிவவாக்கியரிடம் ஒரு பிடி மணலையும் பேய்ச்சுரக்காயையும் எந்த ஒரு பெண் சமைத்து தருகிறாளோ அவளையே நீ மணந்து கொள்வாயாக என்று கூறுகிறார். அத்துடன் சிவவாக்கியர் ஞானி கூறிய சிந்தனைகளையும் போதனைகளையும் ஊர் மக்கள் அனைவருக்கும் போதிக்கிறார். பல பெண்கள் இவரை மணந்து கொள்வதற்காக தயாராக இருந்தார்கள் ஆனால் சிவவாக்கியர் ஒரு பிடி மணலையும் பேய்ச்சுரக்காயையும் சமைத்துத் தரும்படியாக வினவினார். சிவவாக்கியர் சொன்னதைக் கேட்ட பெண்கள் அவரை விட்டு விலகினர். பிறகு குறிஞ்சி நிலப்பரப்பிற்கு சிவவாக்கியர் செல்கிறார். அங்கு குறிஞ்சி நிலப் பெண்ணை பார்த்து மணலையும் பேய்ச்சுரக்காயையும் சமைத்துத் தருமாறு கேட்கிறார். அந்தப் பெண்ணும் அதனை மறுக்காமல் உணவாகத் தயார் செய்கிறாள். பின்னர் சிவவாக்கியர் அப்பெண்ணை மணந்து கொள்கிறார். இவர் முன்பு வைணவராக இருந்தார் என்றும் பிறகு தான் சைவத்திற்கு மாறினார் எனவும் கூறப்படுகின்றன இதற்குச் சான்றாக நாமத்தைப் பற்றியும் கண்ணனைப் பற்றியும் பாடல்கள் அமைந்துள்ளன. இவரே வைணவராக இருந்தபோது திருமழிசை ஆழ்வாராக இருந்தார் எனவும் குறிப்பிடுகின்றனர்.

**சிவவாக்கியரின்பாடல்அமைப்பு:**

சித்தர் பாடல் என்றாலே இறைவனை அடைவதற்கான வழிமுறைகளையும், சிந்தனைகளையும், அமைதியான முறையில் தான் சித்தர்கள் கூறுகின்றனர். ஆனால் சிவவாக்கியர் தனது பாடலில் புரட்சி நிறைந்தபாடல்களைப் மிகுதியாகப் பாடியவர் இவரே

ஆவார். இவர் பாடல்களில்" சிவாயமே" என்ற தொடரையே தம் பாடல்களில் இறுதி சீராக அமைத்துள்ளார். சிவாயமே என்ற சொற்களை அதிகமாக பயன்படுத்திய காரணத்தினாலே இவருக்கு "சிவவாக்கியர்"என்ற பெயரும் வந்துள்ளது எனலாம். இவர்பாடிய பாடல்களில் சமூகத்தின் இழிவுகளையும் சாதியையும் பற்றிப். பாடியுள்ளார். பெரும்பாலான மக்கள் வழிபடும் முறையான சடங்குகளால் மட்டும் இறைவன அடைய முடியாது என்ற கொள்கையை பரப்பியவர் இவரே ஆவார்.

**"சாதி ஆவது ஏதடா"**

**"சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மை"**

என்று சாதி என ஒன்று இல்லை என்று அறிவுறுத்துகிறார்.

**ஞானம்:**

ஞானம் என்பது அறிவு என்று பொருள்படும். ஞானம் என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். ஞானம் மற்றும் அறிவுச்சொற்களால் வேறுபட்டாலும் பொருளால் ஒன்றுபடுகின்றன. அதுவே நம்மனதில் தான் இருக்கின்றன. மனதைத்தேடி சேர்ந்தாலே ஞானத்தினை அடைய முடியும் என்று சிவவாக்கியர் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

**ஞானநூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்**
**ஞான மான சோதியைநாடிஉள்அறிகிலீர்**
**ஞானம்ஆகி நின்றதோர்நாதனைஅறிந்தபின்**
**ஞானம்அல்ல தில்லைவேறுநாம்உவைத்த துண்மையே**

**(சிவவாக்கியர் -454)**

நமது உள்ளத்தினை அறிந்து கொண்டாலே ஞான வாழ்க்கையை முழுமையாக அடைய முடியும் இதன் பலனாக அல்லல் இல்லாத நலமான வாழ்க்கையை வாழ முடியும் என்கிறார் சித்தர் சிவவாக்கியர். அறிவைப் புத்தகங்களின் வாயிலாகத்தான் அறிய முடியும் என்று மக்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். வேறும்புத்தகத்தினை படிப்பதால் மட்டும் ஞானத்தினை அடைய முடியாது என்கிறார் திருமூலர்.

**"உள்ளம்பெருங்கோயில்ஊனுடம்பாலயம்**
**வள்ளற் பிரானார்க்குவாய்கோபுரவாசல்**
**தெளிந்தார்க்குச் சீவன்சிவலிங்கங்**
**கள்ளப்புலனைந்துங்காளாமணிவிளக்கே"** **(திருமந்திரம்-1792)**

**புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்**
**செத்திடம்பிறந்திடம்மதெங்ஙன்என்றேஅறிகிலீர்**
**அத்தனையசிந்தனை அறிந்துநோக்கவல்லிரேல்**
**உத்தமத்துள்ஆயசோதிஉணரும்போகம்ஆகுமே**

**(சி**

**வவாக்கியர் -472)**

புத்தகத்தின் வழியாக மட்டும் ஞானத்தினை அறிய முடியாது.உள்ளத்தின் துணையைக் கொண்டுதான் நாம் யார் என்பதையும் நமக்கு அப்பாற்ப்பட்ட ஆற்றலையும் பரஞ்சோதியான இறைவனையும் அடையமுடியும் என்று தம் பாடலில் சிவவாக்கியர் கூறியுள்ளார்.

**என்னிலேயி ருந்தவொன்றையான றிந்ததில்லையே**
**என்னிலேயி ருந்தவொன்றை யான றிந்துகொணிடபின்**
**என்னிலேயி ருந்தவொன்றை யாவர்காணவல்லரோ**
**என்னிலேயி ருந்திருந்துயானுஊர்ந்து கொண்டெனே.**

**(சிவவாக்கியர் -06)**

எனக்குள் இருக்கும் பரம்பொருளாகிய உன்னை நான் பலகாலமாக அறியாமல் இருந்தேன். அவ்வாறாக எனக்குள் இருக்கும் பரம்பொருளை என்னை தவிர வேறு யாராலும் அறியமுடியாது. எனக்குள்ளேயே நான் நீண்டகாலமாக தேடி அலைந்து கொண்டு இருந்தேன்.

**தூரம்தூரம்தூரமென்றுசொல்லுவார்கள்சோம்பார்கள்**
**பாரும்விண்ணும்எங்குமாய்ப்பரந்தஇப்பராபரம்**
**ஊருநாடுகாடுமோடிஉழன்றுதேடும்ஊமைகாள்!**
**நேரதாகஊம்முளேஅறிந்துணர்ந்து கொள்ளுமே!**

**(சிவவாக்கியர் -27)**

கடவுள் இருக்கும்இடம்தான்நம்மனம் .அதனுள்கடவுளைத்தேடிகோவில்களுக்கும்யாத்திரைத்தலங்களிலும், காடுகளிலும்தவம்செய்வதினாலும்கடவுளைஅடையமுடியாது.அவர்கள்யாவரும்ஊமைகளே.

**தங்கம்ஒன்று ரூபம்வேறுதன்மையானவாறுபோல்**
**செங்கண்மாலும் ஈசனும்சிறந்திருந்தஎம்முளே**
**விங்களங்கள் பேசுவார்விளங்குகின்றமாந்தரே!**
**எங்கும்ஆகிநின்றநாமம் நாமம்இந்தநாமமே!**

**(சிவவாக்கியர்-28)**

பல வடிவங்களை உடைய ஆபரணங்கள்யாவும் தங்கத்திலிருந்து உருவாகின்றதோ. அவ்வாறு தான் இந்த உலகம் முழுவதிலும்“ பிரம்மம்” என்ற ஒன்று தான் முழுமுதற்கடவுள் ஆகும். இதிலிருந்து தான் திருமால், சிவன் என பலவராகப் பிரிந்து நம்முடலில் இருக்கின்றனர்.

**தொகுப்புரை:**

மனித வாழ்க்கை என்பது நிலையற்ற ஒன்றாகும். இவ்வாறாக இருக்கும் நிலையில் இந்த

பிரபஞ்சம் முழுவதும் இருக்கூடிய நிலையான பொருளான பரஞ்சோதியைத் தேடி அடைவதற்கான வழிமுறைகளையும்.
இந்த பிறப்பிற்கான பயன்களையும் அடைந்த பிறகு இப்பிறப்பிற்கான முக்தியை அளிப்பதாக இருப்பது தான் அண்டம் முழுவதும் அமைந்திருக்க் கூடிய பரம்பொருளாகும்.

**துணைநூல்பட்டியல்:**


1. ஆச்சார்யாபி.எஸ்– திருமந்திரசாரம்-நர்மதாபதிப்பகம்
2. இளங்குமரன்இரா -சித்தர்பாடல்கள்சிவவாக்கியர் –தென்னிந்தியதமிழ்ச்சங்கம்,2002
3. சிதம்பரனார்சாமி – சித்தர்கள்கண்டவிஞ்ஞானதத்துவம்–மணிவாசகர்பதிப்பகம்
4. பரசுராமன்பி.என் – சித்தர்கள்வாழ்க்கை - விகடன்பிரசுரம்,2007